
# The Aravind Way

7 Pillars of Aravind Eye Care System



# அரவிந்தின் வழி

அரவிந்த் கண் காப்பு மையத்தின் ஏழு தூண்கள்

# 1 Making Eye Care Accessible to All

## அனைவருக்கும் ஏற்ற கண்சிகிச்சையை உறுதி செய்தல்



The core of this tall pillar is providing comprehensive eye care to all regardless of ability to pay. But the pillar holds up a larger vision; of searching out and then serving the patients who need the care. This pillar is in line with WHO's recent declaration of universal health as its goal.

இந்தத் தூணின் மைய நோக்கமானது நோயாளிகள் கட்டணம் செலுத்த இயலாத நிலையிலும் அனைவருக்கும் முழுமையான கண் சிகிச்சையை வழங்குதல் என்பதாகும். எனினும் இதன் பரந்த நோக்கமானது, சிகிச்சை தேவைப்படுவோரை நாமே  தேடிச்சென்று சிகிச்சை வழங்குவதாகும். இந்தத் தூணானது உலக சுகாதார நிறுவனம் சமீபத்தில் அறிவித்த ‘‘அனைவருக்கும் ஆரோக்கியம்’’ என்ற இலக்கை ஒத்திருக்கிறது.

# 2 Quality and Continuous Improvement

## தரம் மற்றும் இடைநில்லாத முன்னேற்றம்



The core of this pillar is the quest for perfection. High quality has been a tallpillar, a defining character of the Aravind Eye Care System since its inception. Key metrics are infection rates, visual outcomes and patient satisfaction. A factor of growing importance is monitoring and continually improving, both of quality outcomes and other factors which contribute to quality. Embedded in this is the notion that Aravind continues to be a learning organisation.

இந்தத் தூணின் மைய நோக்கமானது பூரணத்துவத்தை நோக்கிய தேடலேயாகும். அரவிந்த் கண் காப்பு மையம் தொடங்கிய நாள் முதல் அதன் தனித்தன்மையை வரையறுக்கும் நெடிதுயர்ந்த தூணாகத் திகழ்வது உயர்தர மருத்துவ சிகிச்சை ஆகும். இதன் முக்கிய கூறுகளாவன: குறைவான நோய்த் தொற்று விகிதம், சிறப்பான கண் சிகிச்சை மற்றும் நோயாளிகளின் மனநிறைவு ஆகியவற்றை உறுதி செய்தலாகும். நாம் வளர்ந்து வருவதற்கான முக்கிய காரணிகளாவன, தரமான விளைவுகள் மற்றும் அதற்கான காரணிகளை தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் மேம்படுத்தும் பணியில் ஈடுபடுதல் ஆகியவையே ஆகும். இந்தத் தூணை நிலைநிறுத்த நமது நிறுவனம் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருத்தல் அவசியமாகும்.

# 3 Patient Centricity/Compassion

## நோயாளியை மையப்படுத்துதல் / பரிவு காட்டுதல்



The core of this pillar is putting the patient first. This pillar is concerned with the process of answering two questions; what the patient wants, and what the patient needs.  The first requires thinking like patients, and what will satisfy them; the second requires thinking like ophthalmologists, and what will improve eye health.  Doing this with compassion and in a manner that maintains the patient's dignity. This pillar is the antithesis of advertising, creating wants, or selecting patient populations to maximize income.

இந்தத் தூணின் மைய நோக்கமானது நோயாளியை முன்னிலைப்படுத்துதல் என்பதாகும். நோயாளியின் விருப்பம் என்ன? அவரின் தேவை என்ன? ஆகிய இரண்டு கேள்விகளுக்கு இது பதிலளிக்கிறது. முதலாவது நோயாளியின் இடத்திலிருந்து எது அவருக்கு மனநிறைவை ஏற்படுத்தும் என்று சிந்திப்பதாகும். இரண்டாவது கண் மருத்துவரின் இடத்திலிருந்து எது நோயாளியின் கண் பார்வையை/நலனை மேம்படுத்தும் என்று சிந்திப்பதாகும். மேலும் இந்த சிந்தனையில் நோயாளிகள் மீது பரிவும், மரியாதையும் கலந்திருப்பது அவசியமாகும். இந்தத் தூனானது மருத்துவமனையின் வருமானத்தை உயர்த்துவதற்காக விளம்பரம் செய்தல், சமுதாயத்தில் செயற்கையான தேவையினை உருவாக்குதல் அல்லது குறிப்பிட்ட நோயாளிகளுக்கு மட்டும் சிகிச்சை அளித்தல் ஆகியவற்றிற்கு எதிர்மறையானது.

# 4 Self-reliance/Finding a way

## தற்சார்பு



The core of this pillar is building the capacity to do what is right. The principle is that Aravind will continue to draw from outside individuals or organisations, but not become dependent and will cherish its capacity to make its own decisions. Aravind will continue to find innovative solutions to problems that come in the way of its mission of delivering care to all.

இந்தத் தூணின் மைய நோக்கமானது எதை செய்தாக வேண்டுமோ அதனை செய்யும் தகுதியினை வளர்த்துக்கொள்வதாகும். இதன் கொள்கையாவது அரவிந்த் தொடர்ந்து நிறுவனங்களிடமும், தனி நபர்களிடமும் உதவியினை பெற்றுக்கொள்ளும். ஆயினும், முழுவதுமாக அவர்களை சார்ந்திராமல் தனக்கான முடிவுகளை சுயமாக எடுக்கும் திறனை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்காமல் இயங்குவதாகும். அனைவருக்கும் கண் நலனை உறுதி செய்தல் என்கிற தனது பணியில் தென்படும் பிரச்சனைகளை கையாள்வதற்கு அரவிந்த், தொடர்ச்சியாக புதுமையான தீர்வுகளை கண்டறிந்து செயல்படுத்தும்.

# 5 Staff Centricity

## பணியாளர்களை மையப்படுத்துதல்



The core of this pillar is that staff matter. It rests on a belief that when staff needs are considered, they will respond most effectively to create synergy between individual's aspirations and the organisational goals.

இந்தத் தூணின் மையமானது பணியாளர்கள் முக்கியமானவர்கள் என்பதாகும். பணியாளர்களின் தேவைகளை கருத்தில் கொண்டால் அவர்கள் திறம்பட பணிபுரிவதுடன், தங்களின் லட்சியங்களுக்கும், நிறுவனத்தின் இலக்கிற்கும் இணக்கமான ஒரு சிறந்த விளைவை  ஏற்படுத்துவார்கள் என்கிற நம்பிக்கையில் இந்தத் தூண் நிலை கொண்டிருக்கிறது.

# 6 Frugality

## சிக்கன நடவடிக்கை



The core of this pillar is don’t waste resources. Emphasize good maintenance; don’t replace what can be repaired. Use data to study cost of alternatives. Frugality mindset applies to patient treatment. No unnecessary treatments, return visits, medicines, wait times. Don’t waste patient resources as well as hospital resources.

இந்தத் தூணின் மைய நோக்கமானது வளங்களை வீணாக்கக்கூடாது என்பதாகும். முறையான பராமரிப்பினை வலியுறுத்துதல்; பழுது நீக்க முடிந்ததை மாற்றக்கூடாது. மாற்றுப் பொருட்களின் விலையினை அறிந்துகொள்ள தரவுகளைப் பயன்படுத்த வேண்டும். நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும் இந்த சிக்கன நடவடிக்கை எண்ணம் பொருந்துகிறது: தேவையற்ற சிகிச்சைகள், மறுபரிசோதனை, மருந்துகள், காத்திருக்கும் நேரம் ஆகியவை கூடாது. தேவையில்லாமல் நோயாளிகளின் நேரத்தையும், பணத்தையும், மருத்துவமனையின் வளங்களையும் வீணடிக்கக் கூடாது.

# 7 Sharing

## பகிர்தல்



The core of this pillar is to help others be more effective in eliminating needless blindness. The principle is to put this mission ahead of the organisation itself.

இந்தத் தூணின் மைய நோக்கமானது தேவையற்ற பார்வையிழப்பினை அறவே தவிர்க்கும் பணியில் மற்றவர்களும் திறம்பட செயல்பட உதவி செய்தல். அரவிந்த் என்கிற  நிறுவனத்தினை விடவும் இந்த நோக்கத்தினை முன்னிலைப்படுத்துவதே இதன் கொள்கையாகும்.